# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2023

ஆண்டு: 7 திகதி: 17.06.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. மங்கயற்கரசி விஜயகுமார்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஆடி மாதம் என்றதும் நமக்கு ஞாபகத்திற்கு வருவது ‘‘ஆடிக்கூழும் கொழுக்கட்டையுமே’’. ‘‘ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை’’என்ற பாடலும் நினைவுக்கு வரும். அந்தப் பாடலைப் பாடியவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

இவர் யாழ்ப்பாணத்தில் நாவலியூரிலே 1878ஆம் (ஆயிரத்தி எண்ணூற்றி எழுபத்தி எட்டாம்) ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் கதிர்காமர், தாயார் பெயர் இலக்குமிப்பிள்ளை. இவர் தந்தையாரிடமும் அருணாசல உபாத்தியாயரிடமும் தமிழ், இலக்கண, இலக்கியங்கள் கற்றுச் சிறந்து விளங்கினார்.

சோமசுந்தரப்புலவர் குழந்தைகளுக்கான ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, புளுக்கொடியல், பவளக்கொடி, இலவுகாத்த கிளி உள்ளிட்ட ஏராளமான பாடல்களை சிறுவர்களுக்காக இயற்றினார். அவற்றுள் ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, இலங்கை வளம், தாலவிலாசம், போன்றன சிறப்பானவை.

‘‘ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே’’

என்ற பாடல் ஆடிப்பிறப்பன்று குழந்தைகள் அடையும் குதூகலத்தை வெளிப்படுத்துகிறது. அன்று விடுமுறை நாளாகவும் பனங்கட்டிக்கூழும் கொழுக்கட்டையும் உண்டு மகிழும் நாளாகவும் காண்கிறோம். தமிழையும், சைவத்தையும் இரு கண்களாகப் போற்றினார். ஏறக்குறைய 15 ஆயிரம் பாடல்களை எழுதியுள்ளார். சிறுவர்களுக்காக இவர் பாடிய பாடல்கள் ‘சிறுவர் செந்தமிழ்’ என்ற பெயரில் 1955இல் நூலாக வெளிவந்தது. இவர் ‘தங்கத் தாத்தா’ என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டார்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ‘‘ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே’’ என்ற

பாடலைப் பாடிய புலவர் யார்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

2. ‘ஆடிப்பிறப்பு’ என்றதும் எமக்கு ஞாபகத்திற்கு வருவது என்ன?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

3. ‘நவாலியூர் சோமசுந்தரப்புலவர்’ எங்கு? எப்போது பிறந்தார்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

4. சோமசுந்தரப்புலவர் எவற்றை இரு கண்களாகப் போற்றினார்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

5. ‘நவாலியூர் சோமசுந்தரப்புலவர்’ பற்றி 5 (ஐந்து) வசனங்கள் எழுதுக

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

3. ……………………………………………………………………………………

4. ……………………………………………………………………………………

5. ……………………………………………………………………………………

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைக் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையில் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| பொருட்படுத்தமாட்டான் | தற்பெருமை | அதிர்ச்சி | தன்னடக்கம் | நம்பிக்கை |
| மூதுரை | நடைபெற்றது | நகையாடுவான் | மீட்டல் | திறமைசாலி |

அமைதி காத்த இளங்கோ

ஏழாம் ஆண்டில் படிக்கும் அருண் மிகவும் …………………………………….. . சக மாணவர்களோடு ஒப்பிடுகையில் அவன் எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்கினான். பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே அவனுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஆகையால், அவனுக்குத்……………………………தலைதூக்க ஆரம்பித்தது.

ஒருநாள், அருண் வகுப்பிற்கு இளங்கோ என்ற மாணவன் புதிதாக வந்து சேர்ந்தான். அவனிடம் ……………………………… மிகுந்திருந்தது. இளங்கோவிடம் பழக வரும் மாணவர்களைத் தடுக்கலாணான் அருண். வகுப்பில் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குத் தான் மட்டுமே பதிலளிக்க வேண்டும் என்ற பழக்கமுடைய அருண், சில வேளைகளில் இளங்கோ பதிலளிக்கும்போது அவனை எள்ளி ……………………………………….. .

ஆனால், இளங்கோ அதனைப் ………………………………………….. அமைதி காத்துத் தன் திறமையை நிருபிக்கச் சரியான தருணத்திற்குக் காத்திருந்தான்.

அரையாண்டு தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. வகுப்பில் மாணவர்கள் அனைவரும் ……………………………………. செய்து வந்தனர். அருண் மட்டும் தன் திறமையின் மீது அதிக …………………………………… கொண்டிருந்ததால் சரியான முறையில் மீள்பார்வை செய்யவில்லை. நானே எல்லாப் பாடங்களிலும் அதிகப் புள்ளிகள் பெறுவேன் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தான்.

அரையாண்டுத் தேர்வு ………………………………… மாணவர்கள் முடிவிற்காகக் காத்திருந்தனர். இளங்கோவின் திறமையை அறியாது, தவறான எண்ணங்கொண்டிருந்த அருணுக்குப் பெரும் ……………………………………. காத்திருந்தது. எல்லாப் பாடங்களிலும் இளங்கோ அருணைவிட அதிகமான புள்ளிகள் பெற்று வகுப்பிலேயே முதல் நிலையில் இருந்தான். அடக்கமாயிருந்த இளங்கோவின் வலிமையை அறியாது, எள்ளி நகையாடியதை எண்ணி வருந்தினான். அப்போதுதான் அவன் கற்ற …………………………….. நினைவிற்கு வந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |

பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக

அ) கலையரசன் பூர்வீகத்திற்குச் சென்று வந்தான்.
கலையரசன் மறக்க முடியாத அனுபவங்களை தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான்.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

ஆ) அம்மா தோசைக் கலவையை கலந்தார்
அம்மா அக் கலவையில் இருந்து பல வகையான தோசைகளைத் தயாரித்தார்.
அம்மா எங்களுக்குப் பரிமாறினார்.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

இ) அப்துல் கலாம் இராமேஸ்வரத்தில் பிறந்தார்.
அவர் இந்தியாவின் பதினோராவது குடியரசுத்தலைவரானார்.
அப்துல் கலாம் உயர் விருதான பாரத ரத்னா விருதைப் பெற்றார்.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

இ) கயல்விழி கடைக்குச் சென்றாள்.

கயல்விழி காய்கறிகள் வாங்கினாள்.
கயல்விழி வீடு திரும்பினாள்.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

ஈ) நாங்கள் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் நண்பர்கள் விளையாட்டுப் பூங்காவுக்கு வந்து எம்மைச் சந்தித்தனர்.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




அ) இந்த விழா யாரால் நடாத்தப்பட்டது?

..........................................................................................
..........................................................................................

ஆ) இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கப்பட்டவர்கள் யார்?

…………………………………………………………..

…………………………………………………………..

…………………………………………………………..

………………………………………………………….

………………………………………………………….

இ) இவ்விழாவில் ஹோம்புஷ் தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் எந்த நிகழ்ச்சியைத் தெரிவு செய்து இருந்தார்கள்?

……………………………………………………………………………………………

ஈ) இந்த விழா எங்கு, எப்போது நடைபெற்றது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

உ) 'கம்பன் விழா 2015' நிகழ்ச்சிக்கு கலந்து கொள்பவர்களுக்குரிய கட்டணம் பற்றி விளம்பரத்தில் என்ன தெரிவித்துள்ளார்கள்?

……………………………………………………………………………………………

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |

3. உமது பிறந்தநாள் நாள் விழாவுக்கு உமது நண்பரைக் கலந்து கொள்ளுமாறு அழைத்து ஒரு கடிதம் அனுப்புக. 70 சொற்களில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக

1. உங்களது பூர்விக பிரதேசத்திற்குச் சென்று வந்த பயண அனுபவத்தைப் பற்றி விபரித்து எழுதுக
2. உமது தமிழ் பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா